# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் ஜெர்மனி - ஹேம்பெர்க்கிலுள்ள பள்ளிவாயிலில் 15.08.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் சூரா அல் அஃராஃபின் 30-வது வசனத்தை ஓதினார்கள் :**

பொருள்: நீர் கூறுவீராக! என் இறைவன் எனக்கு நீதியைக் (கடைபிடிக்குமாறு) கட்டளையிட்டுள்ளான். மேலும் நீங்கள் வணங்குமிடம் ஒவ்வொன்றிலும் உங்கள் முகங்களை நேரான திசையில் வைத்துக் கொள்ளுங்கள். மேலும் மார்க்கத்தில் உங்களை அவனுக்காகக் களங்கமற்றவர்களாய் ஆக்கிக் கொண்ட நிலையில் அவனையே அழையுங்கள். அவன் உங்களை தோற்றுவித்தது போல், நீங்கள் (அவனிடமே) திரும்புவீர்கள். (7:30)

பொதுவாக நான் ஜெர்மன் மாநாட்டிற்கு வருவதற்கு முன்னர் FRANKFURT ஐ தவிர வேறு எந்த இடத்திற்கும் செல்வதில்லை. இந்த முறை ஜெர்மன் மாநாடு கொஞ்சம் முன்னதாக நடக்கின்றது. இதனால் இலண்டனிலிருந்து ஜெர்மனிக்கு விரைவாக நான் வர வேண்டியது வந்தது. வெளிநாடுகளிலிருந்து U.K –ன் ஆண்டு மாநாட்டிற்காக வருகை தந்திருந்த விருந்தினர்களிடமும் மிகவும் விரைவாக அவர்களை சந்தித்து முடிப்பதற்கு முயற்சி செய்யப்பட்டது. பாகிஸ்தானிலிருந்தும் மற்ற நாடுகளிலிருந்தும் பெரும் எண்ணிக்கையில் மக்கள் U.K ஆண்டு மாநாட்டிற்கு வந்திருந்தார்கள். ஆனால், பலருக்கும் என்னை சந்திக்க முடியாத நிலையும் ஏற்பட்டு விட்டது என்று நான் கருதுகின்றேன். இதற்கு ஒரு காரணம் ஒரு வாரத்திற்கு முன்னதாகவே இந்த முறை ஜெர்மனியின் ஆண்டு மாநாடு நடப்பதாகும். அதனால் ஜெர்மனிக்கு முன்னதாகவே வரவேண்டிய நிலை உருவானது.

இரண்டாவது காரணம் ஜெர்மனி ஜமாஅத்தின் அமீர் சாஹிப் அவர்கள் நீங்கள் HAMBURG –ற்கு வந்து வெகு நாட்கள் ஆகி விட்டது. எனவே, இங்கும் சுற்றுப்பயணம் மேற்கொள்ளுங்கள். பிறகு HAMBURG –ற்கு அருகில் கட்டப்பட்டுள்ள பள்ளிவாசல்களை திறந்து வைக்க வேண்டும் என என்னிடம் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார். இரண்டு பள்ளிவாசல்களுக்கான திறப்பு விழா நிகழ்ச்சி இருக்கும். ஒரு பள்ளிவாசலின் திறப்பு விழா நேற்று நடைபெற்று விட்டது. ஸ்டடே என்ற இடத்தில் பைத்துல் கரீம் என்ற பள்ளிவாசலின் திறப்பு விழா நேற்று நடந்தது. நாளை திரும்பிச் செல்லும்போது HENEWELL என்ற இடத்தில் இரண்டாவது பள்ளிவாசலின் திறப்பு விழா நிகழ்ச்சி இருக்கும். அங்கு பைத்துஸ் ஸமீர் என்ற பள்ளிவாசலின் திறப்பு விழா இருக்கும்.

இந்த வருடம் ரமலான் மாதமும் விரைவாக வருவதால் பொதுவாக ஆண்டு மாநாடு நடைபெற்ற பிறகு பள்ளிவாசல்களின் திறப்பு விழா நிகழ்ச்சிகள் நடப்பது இப்போது மாநாட்டிற்கு முன்னதாகவே நடத்தப்பட வேண்டியது உள்ளது. எனவே, ஆண்டு மாநாட்டிற்கு பிறகு இங்கு நான் தங்குவது இருக்காது.

**இன்று பள்ளிவாசல்கள் பற்றி நான் சில விஷயங்களை கூறுவேன்:**

அல்லாஹ்வை வணங்குவதற்காகவே பள்ளிவாசல்கள் கட்டப்பட்டுள்ளன. இவ்வகையில் ஒரு அஹ்மதி முஸ்லிமின் வாழ்வின் ஒரு முக்கிய அம்சமாக இந்த பள்ளிவாசல்கள் இருக்கின்றன. அவ்வாறு இருக்கவும் வேண்டும். இந்த முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு எங்கு பள்ளிவாசல்கள் கட்டப்பட்டாலும் அதை திறந்து வைப்பதற்காக நான் செல்கின்றேன்.

கடந்த 5 வருடங்களில் ஜெர்மனியிலும் உலகின் ஏனைய நாடுகளிலும் பள்ளிவாசல்களைக் கட்டுவதன் பக்கம் ஜமாஅத்திற்கு அதிகம் கவனம் ஏற்பட்டுள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கட்டளைக்கிணங்க ஜமாஅத்திற்கும் இதன் பக்கம் நான் கவனமூட்டி வருகின்றேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியிருப்பது போன்று எங்கு ஜமாஅத்தை அறிமுகப்படுத்த வேண்டியது வந்தாலும் இஸ்லாத்தை தப்லீக் செய்ய வேண்டியது வந்தாலும் இஸ்லாத்தின் அழகு, சிறப்பு ஆகியவற்றை

வெளிப்படுத்தும் அதன் போதனைகளை மக்களுக்கு எட்ட வைப்பதற்கும் அங்கு பள்ளிவாசல்கள் கட்டுவது மிகவும் அவசியமானதாகும். இதன் மூலம் நமது தர்பிய்யத்திற்கான சந்தர்ப்பமும் கிடைக்கின்றது. தப்லீகிற்கான சந்தர்ப்பமும் கிடைக்கின்றது. நாம் ஒரு பள்ளிவாசலைக் கட்ட எண்ணுகின்ற போதும் அதைக் கட்டுகின்ற போதும் இந்த முக்கிய நோக்கத்தை எப்போதும் நமது முன்னால் வைத்து செயல்படுவதற்கு அல்லாஹ் நமக்கு வாய்ப்பளிப்பானாக. இந்த வகையில் ஒவ்வொரு அஹ்மதி ஆணும், பெண்ணும், இளைஞரும், முதியவரும் தங்களை ஆய்வு செய்து பார்த்துக் கொண்டிருந்தால் அவர்கள் பள்ளிவாசல்களை கட்டுவதிலிருந்தும் அருள்களைப் பெற முடியும். ஒரு காலத்தில் HAMBURG –ல் ஒரு சிறிய பள்ளிவாசல் இருந்தது. இன்று வரை அந்த பள்ளிவாசல் இருந்து வருகிறது. அஹ்மதிகளும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில்தான் அங்கு இருந்து வந்தார்கள். அது நமது தேவைக்கு ஏற்ப போதுமானதாகவே இருந்தது. அந்த பகுதியிலுள்ள மக்கள் மீதும் அந்த பள்ளிவாசலால் நல்ல தாக்கம் ஏற்பட்டது. அல்லாஹ்வின் அருளால் இன்று வரை இந்த தாக்கம் இருந்து வருகிறது. ஆனால், அதற்கு பிறகு நமது தேவைக்கு ஏற்ப ஜமாஅத்தின் எண்ணிக்கை பெருகப் பெருக நீங்கள் ஒரு பெரிய இடத்தை பள்ளிவாசலுக்காக வாங்கினீர்கள். அது இப்போது பைத்துர் ரஷீத் (BAITUR RASHEED) என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. இந்த பள்ளிவாசலில் பெரிய Hall –ம் இருக்கின்றது. 1200 பேர் வரை இந்த பள்ளிவாசலில் தொழ முடியும். இதற்கு முன்னர் எப்போது நான் இங்கு வந்தாலும் பள்ளிவாசல் முழுவதும் நிரம்பியிருப்பதை என்னால் பார்க்க முடிந்தது. பக்கத்து ஜமாஅத்திலுள்ளவர்களும் ஜுமுஆ தொழுவதற்காக இந்த பள்ளிவாசலுக்கு வருவார்கள். அதற்காக TENT போட வேண்டியதும் வந்தது. பிறகு அந்த இடமும் சிறியதாக ஆகி விட்டது. இந்த முறை நேற்று நான் இங்கு வந்த சமயத்தில் மக்ரிப், இஷா தொழுகையில் வந்தவர்களது எண்ணிக்கையை நான் பார்த்த போது இந்த பள்ளிவாசல் மீண்டும் சிறிதாகி விட்டதை என்னால் பார்க்க முடிந்தது. மக்கள் பள்ளிவாசலுக்கு வெளியிலும் தொழுது கொண்டிருந்தார்கள். எனவேதான், இன்று இந்த HALL –ல் ஜுமுஆ தொழுகைக்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாம் எட்டிக்குதித்து பெரும் கட்டிடங்களை கட்டும்போது அல்லாஹ் நம்மீது அருள் செய்தவாறு நமது தேவைகளை இன்னும் அதிகரிக்கும்படி செய்து விடுகின்றான். நாம் முழுக்க முழுக்க அவனது அடியாராக ஆகியவாறு இதற்காக முயற்சிகளை செய்து கொண்டிருக்கும் வரை, அல்லாஹ்வின் வீட்டை நிரப்புவதற்காக நாம் முயல்கின்ற வரை அல்லாஹ் நமது தேவைகளை மேலும் அதிகரிக்கும்படி செய்து விடுவான். ஜமாஅத்தும் முன்னேறிக் கொண்டே செல்லும். பள்ளிவாசல்களின் அழகை மேலும் அதிகமாக ஆக்குவதற்கு எப்போதும் நாம் முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ்வும் அவனது தூதரும் கூறியதற்கு ஏற்ப நமது முயற்சிகள் இருக்க வேண்டும்.

**நான் ஓதிய திருக்குர்ஆன் வசனத்தில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:**

நீர் கூறுவீராக! எனது இறைவன் நீதியை (கடைபிடிக்குமாறு) எனக்கு கட்டளையிட்டுள்ளான். நீங்கள் ஒவ்வொரு பள்ளிவாசலிலும் உங்களது கவனத்தை அல்லாஹ்வின் பக்கம் வையுங்கள். மேலும் மார்க்கத்தில் உங்களை அவனுக்காகக் களங்கமற்றவர்களாய் ஆக்கிக் கொண்ட நிலையில் அவனை அழையுங்கள். அவன் உங்களை முதன் முறையாக படைத்ததுபோல் (மரணத்திற்குப் பிறகு) நீங்கள் அவனிடமே திரும்புவீர்கள். (7:30)

இந்த வசனத்தில் அல்லாஹ் பள்ளிவாசல்களுக்கு வருபவர்களுக்கு சில விஷயங்களின் பக்கம் கவனமூட்டியுள்ளான். நான் நீதியை கடைபிடிக்குமாறு இறைவன் எனக்கு கட்டளையிட்டுள்ளான் என்று அறிவிப்பு செய்ய வேண்டியது ஒவ்வொரு மூஃமினுடைய கடமையாகும். நீதி என்றால் என்ன? இதைப் பற்றி அல்லாஹ் பிறிதோரிடத்தில் இவ்வாறு கூறுகின்றான்.

நீங்கள் அமானத்துகளை (நம்பி ஒப்படைக்கப்பவற்றை) அவற்றிற்குத் தகுதியானவர்களிடமே ஒப்படைக்க வேண்டுமென்றும் நீங்கள்மக்கள் மீது ஆட்சி செய்யும் போது நீதியுடன் ஆட்சி செய்ய வேண்டும். அதாவது நீங்கள் மக்களுக்கிடையில் தீர்ப்பு வழங்கும் போது நீதியுடன் தீர்ப்பு வழங்க வேண்டும் என்றும் அல்லாஹ் உங்களுக்கு கட்டளையிட்டுள்ளான். அல்லாஹ் உங்களுக்கு அறிவுரை கூறுகின்றது

எதுவோ நிச்சயமாக அதுவே மிகவும் சிறந்தது. நிச்சயமாக அல்லாஹ் நன்கு கேட்பவனும் ஆழமான பார்வையுடையவனுமாவான். (4:59)

அல்லாஹ்வுக்குரிய உரிமைகளை நாம் நிறைவேற்றும்போதுதான் ஒரு மூஃமின் நீதியின் உயர்வான தரத்தை நிலைநாட்ட முடியும். அல்லாஹ்வுக்குரிய உரிமைகளை நாம் எப்படி செலுத்த முடியும்? இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்.

அருளாளனான இறைவன் நமக்கு வழங்கியவற்றை நாம் திரும்ப கொடுக்கும் போதுதான் நாம் உண்மையாகவே அவனது அடியானாக ஆக முடியும். அவன் வழங்கியவற்றை திரும்ப கொடுப்பதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பிரிதோரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

இந்த உரிமையை உண்மையிலேயே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்தான் செலுத்தியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அமானத் (நம்பி ஒப்படைக்கப்பட்டவை) என்பதன் பொருள் முழுமை பெற்ற மனிதரின் ஆற்றல், அறிவு, ஞானம், உள்ளம், உயிர், புலன்கள், அச்சம், அன்பு, கண்ணியம், அழகு, எல்லா விதமான ஆன்மீக – பௌதீக அருள்கள் ஆகியவையாகும்.

இவற்றை இறைவன் முழுமை பெற்ற மனிதருக்கு வழங்கியுள்ளான். பிறகு முழுமை பெற்ற மனிதன் நீங்கள் அமானத்துகளை (நம்பி ஒப்படைப்பவற்றை) அவற்றிற்கு தகுதியானவர்களிடமே ஒப்படைக்க வேண்டும் என்ற இறை கட்டளைக்கு இணங்க எல்லா அமானத்துகளையும் இறைவனுக்கே திருப்பி தந்து விட்டார். அதாவது அவனில் தன்னை மாய்த்துக் கொண்டவாறு அவனது வழியில் தன்னை அவர் அர்ப்பணித்து விட்டார்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இந்த மகிமை உயர்வாகவும் சிறப்பாகவும் முழுமையானதாகவும் நமது தலைவரும் நமது எஜமானரும் நமது வழிகாட்டியும் உம்மி நபியும் உண்மையாளரும், உண்மைப்படுத்தப்பட்டவருமான ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களிடம் காணப்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிலைநாட்டிய நீதியின் அந்த உயர்வான தரம் இதுதான். ஆனால் இந்த முன்மாதிரியை நிலைநாட்டி நாமும் நமது சக்திக்கு ஏற்ப இந்த உரிமையை செலுத்துவதன் பக்கமும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு கவனமூட்டியுள்ளார்கள்.

உங்களுக்காக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்மாதிரிதான் பின்பற்ற தகுதியுடையதாகும். அந்த முழுமையான முன்மாதிரியைப் பின்பற்றி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் செல்ல நீங்கள் முயற்சி செய்ய வேண்டும் என்று அல்லாஹ் நமக்கு கட்டளையிட்டுள்ளான்.

இறைவன் நமக்கு வழங்கியவற்றை அவனுக்கு திருப்பிக் கொடுக்கும் போதுதான் நாம் அவனது உண்மையான அடியாராக இருக்க முடியும் அல்லது இறைவன் நமக்கு வழங்கியவற்றை திருப்பிக் கொடுக்க முயற்சி செய்யும் போது தான் நாம் அவனது உண்மையான அடியாராக இருக்க முடியும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிலைநாட்டியுள்ள முன்மாதிரியைப் பின்பற்றி செல்வதற்கு நாம் எப்போதும் தயாராக இருக்க வேண்டும். ஏனென்றால், அவர்கள்தான் அல்லாஹ் அவர்களுக்கு வழங்கிய அமானத்துகளை அல்லாஹ்விற்கு திருப்பி வழங்குவதில் சரியான உரிமையை நிலைநாட்டியுள்ளார்கள். அவர்களைப் பின்பற்றியவாறு இதற்காக முயற்சி செய்வது ஒரு மூஃமினின் கடமையாகும். மேலும் இதுவே ஒரு மூஃமினுக்குரிய அடையாளமாகும். இந்த சிந்தனை உருவாகும் போதுதான் நீதியின் எதிர்பார்ப்புகளை நம்மால் நிறைவு செய்ய முடியும். **அமர ரப்பி பில் கிஸ்த்** – எனது இறைவன் எனக்கு நீதியைக் கடைபிடிக்கும்படி கட்டளையிட்டுள்ளான் (7:30) என்ற

வசனத்தில் எந்த நீதி தொடர்பாக கட்டளையிடப்பட்டுள்ளதோ அது இரு வகையில் நிலைநாட்டப்படும். ஒன்று அல்லாஹ்விற்குரிய உரிமையை செலுத்துவதன் மூலமாக அது நிலைநாட்டப்படும். அல்லாஹ் வழங்கியுள்ள அருட்கொடைகளை அவனது திருப்தியைப் பெறுவதற்காக பயன்படுத்துவதன் மூலமாக அல்லாஹ்வுக்குரிய உரிமையை நான் நிறைவேற்றுகின்றோம். அவன் தந்துள்ள அமானத்துகளுக்குரிய உரிமையை நிறைவேற்றியவாறு அவற்றை அவனுக்கே திருப்பிக் கொடுத்து விடுகின்றோம். இரண்டாவதாக, அடியார்களுக்கு இடையில் நாம் நீதியை நிலைநாட்டுகின்றோம். அல்லாஹ் கூறுகின்றான்: இந்த இரண்டு விஷயங்களுக்காகவும் செய்யப்படும் முயற்சிகள் அல்லாஹ்வின் அருளால்தான் நடக்கும். அதில் கிடைக்கின்ற வெற்றிகளும் அல்லாஹ்வின் அருளினால்தான் கிடைக்கும். எனவே, நீங்கள் பள்ளிவாசலுக்கு வருகின்ற போது உங்களது கவனத்தை முழுக்க முழுக்க அல்லாஹ்வின் பக்கம் மட்டும் நேராக வைத்திருங்கள் என்று அல்லாஹ் இந்த வசனத்தில் நமக்கு கட்டளையிட்டுள்ளான்.

தொழுகைக்காக நிற்கும் போது தூய்மையான களங்கமற்ற உள்ளத்துடன் அவனையே அழைக்க வேண்டும். அவனது அருளை அவனிடம் கேட்க வேண்டும். அல்லாஹ்விற்குரிய உரிமையை செலுத்துவதற்கான தஃவ்பீகையும் நம்மில் ஒருவர் மற்றவரிடம் உள்ள தொடர்புகளில் நீதியை நிலைநாட்டுவதற்குரிய தஃவ்பீகை நமக்கு வழங்குவானாக. எவரது உரிமையையும் பறிப்பதிலிருந்தும் அல்லாஹ் நம்மை காப்பாற்றியவாறு நீதியின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு அல்லாஹ் நமக்கு தவ்ஃபீக் வழங்குவானாக. இவ்வாறு இறைவணக்கத்திற்குரிய உரிமையையும் இறையடியார்களுக்குரிய உரிமைகளை நிறைவேற்றுபவர்களாக நாம் இருந்தால் அதன் காரணமாக இறைவனது அன்பை ஈர்க்கக்கூடியவர்களாக நாம் இருப்போம். இந்த களங்கமற்ற தூய்மையான இறைவணக்கங்களையே அல்லாஹ் ஏற்றுக் கொள்கின்றான். பிறகு அல்லாஹ் பஷீராகவும் இருக்கின்றான். அவன் வெளிப்படையான பொருள்களை மட்டும் பார்ப்பவன் அல்ல. அவன் வெளிப்படையானவற்றை மட்டும் இப்போது பார்க்கவில்லை. மாறாக, அவனது பார்வை மிகவும் ஆழமானதாகும். உள்ளத்தின் ஆழம் வரை அவனது பார்வை இருக்கின்றது. மனிதனின் அந்தரங்கத்தின் மீது அவனது ஆழமான பார்வை இருக்கின்றது. இறைவா! முழுக்க முழுக்க உனக்காகவே நான் இந்த எல்லா செயல்களையும் செய்துள்ளேன். எனவே, எனது துஆக்களை ஏற்றுக் கொள் என்று கூறி அந்த இறைவனை நாம் ஏமாற்றி விட முடியாது. அல்லாஹ், நான் பஷீராக இருக்கின்றேன் என்று கூறுகின்றான். நீங்கள் உங்களது அமானத்துகளை திருப்பி எனக்கு தந்த போது உங்களது நிய்யத் (நல்லெண்ணம்) எவ்வாறு இருந்தது? என்பதும் எனக்கு தெரியும். இறைவனது திருப்தியைப் பெறுவதற்காக மட்டும்தானா நீங்கள் தொழுகையை நிறைவேற்றினீர்கள்? என்பதையும் அவன் அறிந்துள்ளான். எனது கட்டளைகளை நிறைவேற்றியவாறு நீதியின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்காக நீங்கள் செய்துள்ள முயற்சிகளைப் பற்றியும் அவனுக்கு தெரியும். தொழுகையில் நிற்கும்போது அல்லாஹ்வைப் பற்றிய எத்தகைய வடிவம் நம் கண்முன் இருக்க வேண்டும்? என்று ஒருவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கேட்டார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அதற்குப் பதிலாக இது ஒரு தெளிவான விஷயமாகும். திருக்குர்ஆனில் **உத்ஊன முஹ்லிஸீன லஹுத்தீன்** என்று வந்துள்ளது. அதாவது களங்கமற்ற மனத்தூய்மையுடன் இறைவனை நினைவு கூற வேண்டும். அவனது அருள்களை நன்றாக பார்க்க வேண்டும். அல்லாஹ் மனிதர்கள் மீது செய்துள்ள அருள்களை எப்போதும் நினைவு கூற வேண்டும் என்று கூறினார்கள். இங்குள்ள பலரும் தங்களை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அல்லாஹ்வின் அருள்களை கணக்கிட்டு நீங்கள் எண்ணிக் கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் உண்மையான இறைவணக்கத்தின் பக்கம் உங்களுக்கு கவனம் ஏற்படும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

அல்லாஹ்வின் அருள்களை எப்போதும் பார்க்க வேண்டும். களங்கமற்ற மனத்தூய்மையுடன் அல்லாஹ்வின் அருள்களை நினைவு கூர்ந்தவாறு அவன் பக்கம் உண்மையான முறையில் திரும்ப வேண்டும். அவனே நமது இறைவனும் உண்மையான பாதுகாவலனுமாவான். இறைவணக்கங்களை சரியான முறையில் நிறைவேற்றுவதற்கான வழியை சுருக்கமாக கூறுவதென்றால் அது இறைவனை பார்ப்பது

போன்று நம்மை அவன் முன்னால் நிற்க வைப்பதேயாகும். அல்லது இறைவன் நம்மை பார்க்கின்றான் என்ற உணர்வுடன் நிற்பதாகும். எல்லாவிதமான கலப்படத்திலிருந்தும் இணைவைத்தலிலிருந்தும் தூய்மையடைய வேண்டும். அவனது மகிமையையும் காத்தோம்பும் பண்பையும் கருத்தில் கொள்ள வேண்டும். வழக்கத்தில் இருந்து வரும் துஆக்களையும் ஏனைய துஆக்களையும் தொழுகைகளில் அதிகமாக செய்ய வேண்டும். அதிகமாக தவ்பாவும் இஸ்திக்ஃபாரும் செய்ய வேண்டும். மீண்டும் மீண்டும் தனது பலவீனங்களை அவன் முன்னால் வெளிப்படுத்த வேண்டும். இறைவனுடன் உண்மையான தொடர்பு ஏற்பட வேண்டும்.

இவற்றின் மூலமாக தொழுகையில் நாம் கவனத்தை நிலைநாட்ட வேண்டும் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். இதற்கான உயர்வான நல்லுதாரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திகழ்கின்றார்கள். அல்லாஹ்விடம் தன்னை மாய்த்துக் கொள்வதில் அவர்கள் எத்தகைய உயர்வான தகுதியைப் பெற்றுள்ளார்கள் என்றால் அல்லாஹ் அவர்களைப் பார்த்து **குல் இன்ன ஸலாத்தி வ நுஸுகி வமஹ்யாய வமமாத்தி லில்லாஹி ரப்பில் ஆலமீன்** – எனது தொழுகையும், எனது தியாகமும், எனது வாழ்வும், எனது மரணமும் எல்லா உலகங்களின் இறைவனான அல்லாஹ்வுக்காகவே உள்ளது என்று நீர் கூறுவீராக என்று கூறினான்.

**<u>ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:</u>**

நீர் கூறுவீராக! எனது இறைவணக்கமும், எனது தியாகமும், எனது வாழ்வும், எனது மரணமும் இறைவனது வழியில் இருக்கின்றது. அதாவது அதை விரைவில் வெளிப்படுத்துவதற்காக இறைவன் நாடியுள்ளான். எனது மரணம் மூலம் அவனது அடியார்களுக்கு சுகம் கிடைக்க வேண்டும். எனது மரணம் மூலம் இறையடியார்களுக்கு வாழ்வு கிடைக்க வேண்டும் என்று இவ்வசனத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கூறும்படி கூறியுள்ளான். இங்கு மரணம் என்பதன் பொருள் என்ன? என்பதை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்.

சுருக்கமாக, இந்த வசனத்தின் கருத்து என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உண்மையிலேயே மனித இனத்தின் மீது அனுதாபம் காட்டுவதன் மூலமாகவும் அவர்களுக்காக உழைப்பதன் மூலமாகவும் மனிதயினத்தின் விடுதலைக்காக தனது உயிரையே அர்ப்பணித்து விட்டார்கள். துஆவுடனும், தப்லீக்குடனும் அவர்களுக்காக கடுமையாக உழைப்பதன் மூலமாகவும் ஒவ்வொரு பொருத்தமான ஞானமிக்க வழிமுறை மூலமாகவும் தனது உயிரையும் தனது சுகத்தையும் இந்த வழியில் அர்ப்பணித்து விட்டார்கள்.

அல்லாஹ்வின் ஒரு அடியார் இறைவன் மீதுள்ள அன்பில் திளைத்து விட்டால் அல்லது அதற்காக முயற்சி செய்தால், அதற்காக ஒரு மூஃமின் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த முன்மாதிரியை தனக்கு முன்பாக வைத்து அது போன்றே செயல்பட்டால் அதன் மூலமாக இறைவனின் உண்மையான அடியாராக அவர் ஆகுவதைத் தவிர வேறு எந்த விளைவும் ஏற்படப்போவதில்லை. அவனது படைப்பினங்களுக்கு தொண்டு செய்வதற்காக நீதியின் எல்லா எதிர்பார்ப்புகளையும் அவர் நிறைவு செய்வார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக அல்லாஹ் இறக்கியுள்ள அந்த உண்மையான போதனைகளை உலகிற்கு அவர் புரிய வைப்பார். அதன் மூலமாக உண்மையான நீதி உலகில் நிலைநாட்டப்படும். ஒருவர் இறைவனை வணங்குவதன் பக்கமும் கவனம் செலுத்தும் போதும் அல்லாஹ்வின் படைப்பினங்களுக்குரிய உரிமைகளை நிறைவேற்றுவதற்காக அதன் அனைத்து எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றும் போது அவர் தனது நஃப்ஸை தூய்மையாக்குவதில் உயர்வான தரத்தைப் பெறாமல் இருக்க முடியாது. அதன் பக்கம் அவரது கவனம் செல்லாமல் இருக்க முடியாது.

அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு ஏற்பவும் செயல்பட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்வான முன்மாதிரியைப் பின்பற்றுவது மனிதனுக்கு எத்தகைய உயர்வான தகுதியை வழங்குகிறது என்றால் அந்த மனிதன் இறைவனுக்கு முன்னால் நிற்கும்போது ஒரு தூய பாவமற்ற ஆன்மாவின் வடிவில்தான் அவர் முன்னால் நிற்பார். இந்த உயர்வான தகுதியையும் நோக்கத்தையும் பெறுவதற்காக அல்லாஹ் சூரா அந்நஹ்லில் இவ்வாறு கட்டளையிட்டுள்ளான்:

நிச்சயமாக அல்லாஹ் (நீங்கள்) நேர்மையுடன் நடந்து கொள்ளவும் நன்மை செய்யவும், உறவினர்களுக்கு (கொடுப்பதைப் போல)க் கொடுக்கவும் கட்டளையிடுகின்றான். (எல்லா வகை) வெட்கக் கேட்டிலிருந்தும், வெறுக்கத்தக்கவற்றில் இருந்தும், வரம்பு மீறுதல்களிலிருந்தும் அவன் தடுக்கின்றான். நீங்கள் படிப்பினை பெற வேண்டும் என்பதற்காக அவன் உங்களுக்கு அறிவுரை வழங்குகின்றான். (16:91)

மனிதன் இறைவனுக்கு உரிய உரிமைகளை செலுத்தியவாறு நீதியின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றியவாறு இறையடியார்களுக்கு உரிய உரிமைகளையும் நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளை இந்த வசனத்தில் விளக்கியுள்ளான். இதன் மூலம் நமது நஃப்ஸையும் நாம் தூய்மைப்படுத்த முடியும். இதுதான் முழுக்க முழுக்க இறைவனுக்காகவே ஆகி விட்டு அவன் முன்னால் குனிவது என்பதன் கருத்தாகும். இந்த வசனத்தின் முதல் பகுதியை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

முதலாவதாக இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ள கருத்து என்னவென்றால் நீங்கள் உங்களை படைத்தவனுடன் அவனுக்கு கீழ்படிந்து நடப்பதில் நீதியின் வழிமுறையை கடைபிடிக்க வேண்டும். அநீதியிழைப்பவராக ஆக வேண்டாம். அந்த இறைவனை தவிர வேறு யாரும் வணக்கத்திற்கு தகுதியற்றவராக இருக்கின்றார். அந்த இறைவனை தவிர எவரும் அன்பு செலுத்த தகுதியற்றவராக இருக்கின்றார். அந்த இறைவனைத் தவிர எவர் மீதும் நம்பிக்கை வைக்க முடியாது. மேலும் அந்த இறைவன் ஒவ்வொன்றையும் படைப்பவனாகவும், காத்தோம்புபவனாகவும், அவற்றை நிலைநிற்கச் செய்பவனாகவும் இருக்கின்றான். அந்த இறைவன் எப்போதும் இருந்து வருகின்றான். எப்போதும் இருந்து வருவான். எந்தப் பொருளை அவன் படைத்தாலும் அதன் குறிப்பிட்ட தவணை வரை அதற்கு அவனே வாழ்வு வழங்குகின்றான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவன் ஒவ்வொன்றையும் படைப்பவனாகவும், அவற்றை நிலைநிற்கச் செய்பவனாகவும் இருப்பதால் எல்லா வகையான உரிமையும் அவனுக்கு மட்டுமே இருக்கின்றது. இவ்வாறே நீங்களும் அவனை வணங்குவதிலும் அவன் மீது அன்பு செலுத்துவதிலும் அவனது காத்தோம்பும் பண்பிலும் எவரையும் இணையாக வைத்து விடாதீர்கள். இவ்வாறு நீங்கள் செய்து விட்டாலும் இதுதான் நீதியாகும். இதை கடைபிடிப்பது உங்கள் மீது கடமையாகும்.

அல்லாஹ் எனது இறைவனாவான். எல்லாரையும் விடவும் அல்லாஹ்வின் மீது தான் அதிக அன்பு இருக்க வேண்டும். எனவே, அல்லாஹ்வைத் தவிர வேறு எவரையும் நாம் வணங்கக் கூடாது என்பதை நீங்கள் புரிந்து செயல்பட்டால் இதுதான் அல்லாஹ் தொடர்பாக நீங்கள் நிலைநாட்டியுள்ள நீதியாகும். பிறகு இதில் மேலும் நீங்கள் முன்னேற விரும்பினால் இதற்கு அடுத்த தகுதி **இஹ்ஸான்** (நன்மை செய்தல்) என்பதாகும். அதாவது, நீங்கள் இறைவனின் மகிமையை எவ்வாறு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றால், மேலும் அவனை வணங்குவதற்குரிய மரியாதையை எப்படி நிறைவேற்ற வேண்டுமென்றால் மேலும் அவனது அன்பில் எந்த அளவு திளைத்துவிட வேண்டுமென்றால் நீங்கள் அவனது மகிமையையும், என்றும் அழியாத அவனது அழகையும் கண்டுவிட்டது போன்று நீங்கள் செயல்பட வேண்டும்.

அதாவது, அதல் (நீதியுடன் நடந்து கொள்வது) என்ற தகுதியிலிருந்து முன்னேறும் ஒருவர் இஹ்ஸான் என்ற தகுதியைப் பெறுகிறார். அத்தகுதியின் மூலம் நீங்கள் இறை பண்புகளைப் புரிவதற்கான முயற்சிகளை செய்கீன்றீர்கள். அந்த இறை பண்புகளைப் பற்றிப்பிடித்தவாறு அவன் மீதுள்ள அன்பில் திளைத்து விடுகின்றீர்கள். அவனது அருள்கள் பற்றி எப்போதும் உங்கள் நாவு பேசிக்கொண்டேயிருக்கும். இதற்குப் பிறகு ஈதாயிதல் குர்பா என்ற தகுதி இருக்கின்றது. அது என்னவென்றால், உங்களது இறைவணக்கம், இறைவன்மீது உங்களுக்கு இருக்கும் அன்பு, இறைவனுக்கு நீங்கள் கட்டுப்பட்டு நடக்கும் நிலை ஆகியவற்றின் மூலம் செயற்கையான செயல்கள் உங்களிடமிருந்து முற்றிலும் விலகிவிட வேண்டும். நீங்கள் அந்த இறைவனை உங்களது தந்தையர்களை நினைவு கூர்வது போன்று நினைவு கூர்வீர்கள். ஒரு குழந்தை தனது அன்பான தாயுடன் அன்பு கொள்வது போல் அவன் மீது உங்களுக்கு அன்பு ஏற்பட்டு விடுகின்றது. அதாவது,

எந்த நோக்கத்தையும் எதிர்பார்க்காமல் அல்லாஹ்வின் மீது நீங்கள் அன்பு செலுத்துவீர்கள். துன்பங்களில் சிக்கிக் கொள்ளும் சமயத்தில் மட்டும் பள்ளிவாசல்களுக்கு வந்து இறைவணக்கத்தில் ஈடுபட்டு நீண்ட சஜ்தா செய்கின்ற நிலை இருக்காது. எப்போது எளிதான நிலையும் மகிழ்ச்சியான நிலையும் ஏற்படுமோ, தாராளமாக செலவு செய்யும் வகையில் கையில் பைசா இருக்குமோ அப்போது அல்லாஹ்வை மறந்து விடுவது அல்லது தொழ மறந்து விடுவது போன்ற நிலை ஒருபோதும் இருக்காது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனித இனத்திடம் கருணை காட்டுவது தொடர்பாக இரண்டாவதாக இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ள கருத்து என்னவென்றால் உங்களது சகோதரர்களுடனும் மனித இனத்துடனும் நீங்கள் கருணையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதாகும். உங்களுக்கு அவர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய உரிமைகளுக்கு அதிகமாக அவர்களிடமிருந்து எதையும் நீங்கள் கேட்காதீர்கள். அவ்விஷயத்தில் நீதியில் நிலைத்திருங்கள். பிறகு இந்த தகுதியிலிருந்து நீங்கள் முன்னேற விரும்பினால் இதற்கு அடுத்த படியாக இஹ்ஸான் என்ற தகுதி இருக்கின்றது. அதாவது உங்களது சகோதரர் தீமை செய்தாலும் அதற்கெதிரில் அவருக்கு நீங்கள் நன்மை செய்வதுதான் அந்த உயர் தகுதியாகும்.

அதாவது அந்த சகோதரரிடமிருந்து உங்களுக்கு ஏதாவது துன்பம் இழைக்கப்பட்டால் நீங்கள் அவருக்கு நன்மை செய்வதன் மூலமாக அவரது சீர்திருத்தம் ஏற்பட முடியுமென்றால் அவருக்கு நன்மை செய்ய வேண்டும். அவர் உங்களுக்கு இழைத்த துன்பத்திற்கு பகரமாக அவருக்கு நீங்கள் சுகத்தை வழங்க வேண்டும். அவருக்கு நன்மை செய்யும் வகையில் அவருக்கு நீங்கள் சுகத்தை வழங்க வேண்டும். இதுதான் இஹ்ஸான் என்ற தகுதியாகும். இதற்கு பிறகு ஈத்தாயிதில் குர்பா என்ற தகுதி இருக்கின்றது. அது என்னவென்றால் நீங்கள் எந்த அளவு உங்கள் சகோதரருடன் நன்மை செய்கின்றீர்களோ அல்லது எந்த அளவு மனிதயினத்திற்கு நன்மை செய்கின்றீர்களோ அதற்கு பதிலாக அவரிடமிருந்து எந்த அருளையும் பெற வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருக்கக்கூடாது. மாறாக, மனிதயினத்திற்கு நன்மை செய்வது எவ்வித சுயநோக்கமும் இல்லாமல் இயல்பாகவே உங்களிடமிருந்து வெளிப்பட வேண்டும். எவ்வாறு நெருங்கிய உறவினர்களுக்கு ஒருவர் அவர்கள் மீதுள்ள மிகுந்த நேச உணர்வால் நன்மைகளை செய்வாரோ அவ்வாறே மனித இனத்திற்கும் அவர் நன்மை செய்வார்.

ஒரு உறவினர் தனது மற்ற உறவினர் மீது இயல்பாகவே அவருக்கு இருக்கும் மிகுந்த அன்பின் காரணமாக நன்மை செய்வது போன்று நீங்கள் மனித இனத்திற்கு நன்மை செய்ய வேண்டும்.

**தொடர்ந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இதுவே நல்லொழுக்கத்தில் ஏற்படும் முன்னேற்றத்தின் இறுதியான முழுமையான தகுதியாகும். அதாவது மனித இனத்திடம் கருணையுடன் நடந்து கொள்வதில் தனது சுய நோக்கம் அல்லது சுய இலாபம் எதுவும் இருக்கக் கூடாது. மாறாக, சகோதரத்துவம், நெருங்கிய உறவினர்களிடம் பரிமாறுவது போன்ற மனித நேயம் எந்த அளவு உயர்வான நிலையில் வளர்ச்சியடைந்திருக்க வேண்டும் என்றால் எவ்வித செயற்கையான தன்மையுமில்லாமல் தாமாகவே இயல்பாகவே வெளிப்பட வேண்டும். தான் நன்மை செய்த நபரிடமிருந்து நன்றியை அல்லது வேறு ஏதாவது உபகாரத்தையும் எதிர்பார்க்காத வகையில் அந்த நன்மை அவரது இயல்பிலேயே இருக்கும் நல்லுணர்வு காரணமாக வெளிப்பட வேண்டும்.

இதுதான் இந்த வசனத்தின் முதல் பகுதிக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வழங்கியுள்ள அழகான விரிவுரையாகும். இதுவே முழுக்க முழுக்க இறைவனுக்காகவே தன்னை ஆக்கிக் கொண்டு அவனை வணங்குவதாக கூறுகின்ற நபரிடம் நாம் எதிர்பார்க்கும் நீதியாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு முன்பு நிலைநாட்டியுள்ள அந்த அழகிய முன்மாதிரியின்படி செயல்படுபவர்களாக நாம் இருக்கின்றோம் என்பது அஹ்மதிகளாகிய நமது வாதமாக இருக்கின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் இறக்கியுள்ள அந்த போதனைகளுக்கு ஏற்ப செயல்படுபவர்களாக இருக்கின்றோம். அதன் உண்மையை நமக்கு இந்த காலத்தில் ஹஸ்ரத்

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்தான் புரிய வைத்துள்ளார்கள். நாம் இதனை நாவளவில் மட்டும் கூறுபவர்களாக இருந்துவிட்டு நமது செயல் அளவிலுள்ள நிலைமைகளை மாற்றுவதற்கு முயற்சி செய்யவில்லையென்றால் நமது இந்த வாதம் பொருளற்றதாகி விடும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் விளக்கியுள்ள அந்த மேற்கோளில் மூன்று விதமான நன்மைகளை செய்வதற்கு அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான் என்ற கருத்து கூறப்பட்டிருக்கின்றது. இதன் மூலமாக இறைவனின் உரிமைகளையும் இறைவனின் அடியார்களின் உரிமைகளையும் நாம் செலுத்த முடியும்.

இந்த வசனத்தின் அடுத்த பகுதியில் மூன்று தீமைகள் குறித்தும் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது. மனத்தூய்மையுடன் இறைவனை வணங்கக்கூடிய மனிதனிடத்தில் இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தீமைகள் இருப்பதை நாம் ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது. இறைவணக்கம் இந்த தீமையிலிருந்து நம்மை வெகு தொலைவில் கொண்டு சென்று விடும் என்பது அல்லாஹ் கூறியிருப்பதாகும். நாம் களங்கமற்ற இறைவணக்கத்தை மேற்கொள்ளும்போது இப்படிப்பட்ட தீமைகளை செய்வதிலிருந்தும் நாம் விலகிவிடுவோம் என்பது இறைவனின் வாக்குறுதியாகும். இது தொடர்பாக அல்லாஹ் திருக்குர்ஆனில், நிச்சயமாக தொழுகை எல்லாவிதமான தீமைகளிலிருந்தும் வெறுக்கத்தக்க விஷயங்களிலிருந்தும் தடுக்கின்றது (29:46) என்று கூறியுள்ளான்.

அல்லாஹ் ஒரு நன்மைக்கு பிறகு இன்னொரு நன்மையை செய்வதன் பக்கம் நமக்கு கவனமூட்டுகின்றான். அதன் மூலம் நன்மைகள் செய்வதில் முன்னேறி முன்னேறி ஒரு சமயத்தில் அடியான் முழுக்க முழுக்க இறைவனுக்காகவே ஆகி அவனது திருப்திக்கேற்ற பணிகளைச் செய்யும் உயர் தகுதியைப் பெற்று விடுகின்றான் என்பதை அல்லாஹ் எங்கு சுட்டிக்காட்டியுள்ளானோ அதே இடத்தில் இந்த தீமைகளுக்கு எதிராக ஜிஹாது செய்வதும் அவசியமானதாகும் என்றும் கூறியுள்ளான். அவ்வாறில்லை யென்றால் இந்த தீமைகள் அந்த நன்மைகளை நாம் செய்வதற்கு தடையாக இருக்கும்.

அல்லாஹ் **ஃ ப ஹ் – ா** –விலிருந்து நீங்கள் விலக வேண்டும் என்று நமக்கு கட்டளையிட்டுள்ளான். **ஃ ப ஹ் – ா** என்ற சொல்லில் **தீமைகளை செய்யக் கூடியவனுக்கு மட்டும் தெரிகின்ற தீமைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது**. மற்றவர்களுக்கு இந்த தீமைகள் பற்றி தெரியாமல் இருக்கும். அல்லது அந்த தீமைகள் பெருமளவில் மற்றவர்களது பார்வையிலிருந்து மறைவானதாக இருக்கும். ஒரு மனிதன் களங்கமற்ற தூய மூஃமினாகவும் உண்மையான இறைவணக்கம் செய்யக் கூடியவராகவும் இருக்கும் நிலையில் இறைவன் முன்னால் குனியும் போது முதன் முதலாக அவர் தனது நஃப்ஸை தன் முன்னால் வைத்து தனது தீமைகளை முதலில் பார்த்து விட்டு இறைவன் அவற்றை தன்னிடமிருந்து விலக்க வேண்டும் என்று இறைவனிடம் அவர் துஆ செய்கின்றார். இந்த நிலை உருவானால் அதுதான் ஒரு மனிதன் தனது நஃப்ஸிடம் நிலைநாட்டும் நீதியாகும். எதுவரை தனது நஃப்ஸை முற்றிலும் தூய்மையாக்க ஒருவர் முயற்சி செய்வதில்லையோ அதுவரை ஒருவர் இறைவனை வணங்குவதற்குரிய உரிமைகளை நிலைநாட்ட முடியாது. தனது நஃப்ஸின் மீது அவரது பார்வை இல்லையென்றால், அவ்வாறே ஒவ்வொரு தீமையும் தன்னிடமிருந்து வெளியேற்றி அதை தூக்கி எறிவதற்கான முயற்சிகளை அவர் செய்யவில்லையென்றால் மற்றவர்களிடமும் நீதியின் எதிர்பார்ப்புகளை அவரால் நிறைவேற்ற முடியாது. நீதியின் உரிமைகளுக்குரிய எதிர்பார்ப்புகளையும் உங்களால் நிறைவேற்ற முடியாது.

வெளியிலுள்ளவர்கள் நம்மிடம் எதிர்பார்க்கின்ற நீதியை நிலைநாட்டுவதற்கு முன்பாக நாம் நமது நஃப்ஸை நீதியில் நிலைபெறச் செய்ய வேண்டும். ஒரு மூஃமின் இதறகாக முயற்சி செய்யும்போது பிறகு அவரது கவனம் கலப்பற்ற தூய மனதுடன் இறைவனை வணங்குவதன் பக்கம் திரும்பி விடும்.

பிறகு அல்லாஹ் **முன்கர்** –லிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள் என்று கூறுகின்றான். அதாவது வெறுக்கத்தக்க விஷயங்ளிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள் என்று கூறுகின்றான். அவை நேரடியாக மற்றவர்களுக்கு இழப்பை ஏற்படுத்தக் கூடியவையாக இருக்காது. ஆனால் மற்றவர்கள் அதை பார்க்கும்போது அதனை தீமை என்று உணர்வார்கள். உதாரணமாக சில நேரங்களில் சில மக்களுக்கு எந்த

அளவு பொய் கூறுகின்ற பழக்கம் இருக்குமென்றால் அதனால் மற்றவர்களுக்கு இழப்பு அல்லது தனக்கு நற்பலன் ஏற்படவில்லையென்றாலும் தனது பழக்கத்திற்கேற்ப மக்கள் முன் எடுத்து வைக்கும் பழக்கம் அவருக்கு இருக்கின்றது.

ஒருவர் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம் இன்னொருவரைப் பற்றி அவர் எப்போதும் கெட்ட வார்த்தைகளால் ஏசுவதாக முறையீடு செய்தார். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் எவர் தொடர்பாக முறையீடு செய்யப்பட்டதோ அவரை அழைத்து நீங்கள் கெட்ட வார்த்தைகளால் அதிகமாக ஏசுவதாக நான் கேள்விப்பட்டேன் என்று கூறினார்கள். அந்த நபர் ஒரு கெட்ட வார்த்தையைக் கூறி ஏசிவிட்டு யார் நான் கெட்ட வார்த்தைகளைக் கூறி ஏசியதாக கூறினார் என்று கேட்டார். எனவே, பழக்கத்திற்கேற்ப அவர்கள் கெட்ட வார்த்தைகளால் ஏசுபவர்களாக இருப்பார்கள். எனவே, இத்தகைய தீமையிலிருந்து நாம் தூய்மையடைய வேண்டும். ஏனென்றால், பொய் கூறுவது, விஷயத்தை தவறான முறையில் கூறுவது பிறருக்கு இழப்பை ஏற்படுத்துவதற்காக கூறப்படவில்லையென்றாலும் இந்த பழக்கம் ஒருவரிடம் வந்து விட்டால் பிறகு படிப்படியாக பொய் கூறுவதையே வழக்கமாக கொள்ளும் மனிதனாக அவர் ஆகி விடுவார். பிறகு தனது சுய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக தவறான ஆயுதத்தை பயன்படுத்துபவராக மாறும் அளவில் அவர் சென்று விடுகின்றார். பிறகு இப்படிப்பட்ட மக்கள் களங்கமற்ற தூய மனதுடன் இறைவனை வணங்குபவர்களாக இருக்க முடியாது. ஏனென்றால், களங்கமற்ற தூய உள்ளத்துடன் தொழுபவர்களிடம் இத்தகைய தீமைகள் உருவாக முடியாது என்பது அல்லாஹ்வின் வாக்குறுதியாகும்.

பிறகு மூன்றாவது தீமையாக இறைவன் (16:91) தனது வசனத்தில் வரம்புமீறி செயல்படுவதை சுட்டிக் காட்டியுள்ளான். மற்றவர்களது உரிமைகளை பறிப்பது, சமுதாயத்தில் குழப்பங்கள் ஏற்படுத்துவது ஆகியவை இத்தீமையில் அடங்கும். மனிதன் மற்றவர்களது உரிமையைப் பறிகக ஆரம்பிக்கும்போதும் சமுதாயத்தில் குழப்பத்தை பரப்புவதற்கு காரணாக ஆகும்போதும் அவனால் நீதியின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற முடியாது. எந்த தொழுகையை நிறைவேற்றுவதற்காக அவர் பள்ளிவாசலுக்கு வர முயற்சி செய்கின்றாரோ அல்லது பள்ளிவாசலுக்கு வருகின்றாரோ அந்த தொழுகைகளால் அவர் அந்த நோக்கத்தில் வெற்றி பெற முடியாது.

இப்படிப்பட்ட தீமைகளிலிருந்து தப்பிப்பதற்காக அல்லாஹ் கூறியுள்ள வழிமுறைகளுக்கு ஏற்ப நடப்பது மிகவும் அவசியமானதாகும். தன்னை ஒருவர் எட்டிப் பார்த்து தன்னை ஆய்வு செய்தவாறு தனது நஃப்ஸை தூய்மைப்படுத்துவதுதான் இதற்கான முக்கியமான சிறந்த வழிமுறையாகும். இதன் மூலமாகவே சமுதாயத்திற்கு இன்னல்களை தருகின்ற சாதாரண தீமைகளும் அகலும். மேலும் இதன் மூலமாகவே வரம்புமீறி செய்யப்படும் தீமைகளிலிருந்தும் நாம் விலக முடியும். ஏனென்றால், இந்த தீமைகள் இருந்தால் அவை நம்மை ஜமாஅத்தின் அமைப்பிடமிருந்தும் நம்மை விலக்கி தொலைவில் கொண்டு செல்லக்கூடியவையாக இருக்கின்றன. பிறகு இந்த தீமைகள் கிலாஃபத்திற்கு கட்டுப்படுவதை மறுக்கின்ற நிலைமையையும் உருவாக்கி விடும். பிறகு இப்படிப்பட்ட மக்கள் கலப்பற்ற தூய மனதுடன் இறைவனை வணங்குவதிலிருந்தும் விலகி விடுவார்கள். வெளிப்படையாக இறைவனை வணங்குவதையே அவர்கள் கைவிட்டு விடுவதை நம்மால் பார்க்க முடியாது.

வரம்புமீறி செயல்படுகின்ற எந்த ஒரு மனிதரை நீங்கள் பார்த்தாலும் அவர் தனது தற்பெருமையின் வலையில் சிக்கியிருப்பதை உங்களால் பார்க்க முடியும். தான் என்ற அகங்கார வலையில் சிக்குபவர்கள் ஒருபோதும் பணிவை வெளிப்படுத்தமாட்டார்கள். எவர் பணிவை மேற்கொள்ளவில்லையோ அவர் களங்கமற்ற தூய மனதுடன் அல்லாஹ்வை வணங்கவும் முடியாது. நீதியின் எதிர்பார்ப்புகளையும் அவரால் நிறைவு செய்ய முடியாது.

அல்லாஹ்வின் உண்மையான அடியாராக ஆகவேண்டுமென்றால், இந்த பள்ளிவாசல்களைக் கட்டுவதிலிருந்தும் பலன் கிடைக்க வேண்டுமென்றால் ஒவ்வொரு அஹ்மதியும் இந்த தீமைகளிலிருந்து தப்பிப்பதற்காக முயற்சி செய்தவாறு இந்த நன்மைகளில் உயர்வான தரத்தைப் பெறவும் முயற்சி செய்ய வேண்டும். இதன் பக்கமும் அல்லாஹ் நமக்கு கவனமூட்டியுள்ளான். இதனையே அவர் நமக்கு கட்டளையிட்டுள்ளான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனிதன் கவனமற்ற நிலையில் இருக்கும் நிலையில் அல்லாஹ்வுடன் அவனுக்கு தொடர்பு ஏற்பட முடியாது. நாவால் நான் இறைவனுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டேன் என்று வாதம் செய்வதால் மட்டும் அந்த தொடர்பு ஏற்பட முடியாது. பைஅத் செய்ததாக கூறி ஜமாஅத்தில் தனது பெயரை இடம்பெறச் செய்வதன் மூலமாக மட்டும் அவருக்கு இறைவனுடன் தொடர்பு ஏற்பட்டுவிட முடியாது.

இறைவனுடன் தொடர்பு கொள்வதற்கு இறைவனுக்காக தன்னையே மாய்த்துக் கொள்வது அவசியமானதாகும். நாம் மீண்டும் மீண்டும் நமது ஜமாஅத்திற்கு இவ்விஷயங்களில் நிலைபெற்றிருக்க வேண்டும் என்று கூறியுள்ளோம்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பிறிதோரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

உங்களது பணி இறைவனை வணங்குவது, துஆக்கள் செய்வது, இஸ்திக்ஃபார் செய்வது, நஃப்ஸை தூய்மைப்படுத்துவதில் மூழ்கிவிடுவது ஆகியவையேயாகும். இவ்வாறு இறைவனது கவனமும் அவனது அருளும் உங்கள் பக்கம் திரும்புவதற்கு உங்களை நீங்களே தகுதியுடையவர்களாக ஆக்கிக் கொள்ளுங்கள். இதையே அவன் நமக்கு வாக்குறுதியாக தந்துள்ளான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

தங்களது நல்லொழுக்கங்களில் தூய்மையை ஏற்படுத்துவது நமது ஜமாஅத்தின் தலையாய கடமையாகும். அல்லாஹ்விற்குள்ள உரிமைகளையும் அவனது படைப்பினங்களுக்குரிய உரிமைகளையும் நிறைவேற்றுவதில் நுட்பமான விஷயங்களையும் பேணி நடக்க வேண்டும்.

இதுதான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் எதிர்பார்ப்பவையாகும். இவையே அவர்கள் நமக்கு வழங்கியுள்ள போதனைகளாகும். அல்லாஹ் முழுக்க முழுக்க கலப்பற்ற தூய மனதுடன் அவனை வணங்குபவர்களாக நம்மை ஆக்குவானாக. நீதியின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி அல்லாஹ்வின் படைப்பினங்களுக்குரிய உரிமைகளை நிறைவேற்றுபவர்களாகவும் நமது நஃப்ஸை தூய்மைப்படுத்துவதன் பக்கம் எப்போதும் கவனமுள்ளவர்களாகவும் எப்போதும் இறைவனிடம் நமது இறைவணக்கம், தியாகங்கள் மூலம் அவன் நம்மை ஏற்றுக்கொள்ள அவனிடம் நமது தேவைகளை கேட்பவர்களாகவும் அல்லாஹ் நம்மை ஆக்குவானாக. இறைவன் இதற்காக தவ்ஃபீகை நமக்கு வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT HAMBURG, GERMANY**
**ON 15.08.2008**

Translated by : **Maulavi M. Rafeeq Ahmad H.A**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**